**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் ஜுன் மாதம் 21 ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.10/2021**

முனியசாமி வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

V.பேச்சி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 13.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தர்மர் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

பிராதைத் திருத்துவதற்கு ஏதுவாக மனுவில் கண்ட திருத்தங்களை அங்கீகரித்துக்கொண்டு வழக்கை மேல் நடத்தக்கோரி கட்டளை 06 விதி 17, 18 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

வழக்கின் பிராது தாக்கல் செய்த பின்னர் 1ம் பிரதிவாதி பேச்சி காலமாகி விட்டதால் அசல் வழக்கில் மேற்படியாரின் வாரிசுகளை உத்தேச 8 முதல் 10 பிரதிவாதிகளை சேர்க்கச் சொல்லி இ.ம.எண்.02/2024 என்ற மனுவை தாக்கல் செய்ததில் கடந்த 24.10.2024ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு ஏற்றாற்போல் பிராதை திருத்த வேண்டியது அவசியம் என்பதால் மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், அசல் வழக்கின் வாரிசுகளை உத்தேச 8 முதல் 10 பிரதிவாதிகளை சேர்க்கக்கோரி இ.ம.எண்.02/2024 என்ற மனுவை தாக்கல் செய்ததில் மனுவானது 24.10.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய் என்றும், அசல் வழக்கில் 1, 6, 7 பிரதிவாதிகளில் 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் கடந்த 09.10.2021ம் தேதியும், 6ம் பிரதிவாதி ஆராயி கடந்த 01.10.2020ம் தேதியும், 7ம் பிரதிவாதி பொட்டையம்மாள் கடந்த 30.03.2012ம் தேதியும் இறந்து விட்டதாகவும், 6ம் பிரதிவாதி ஆராயி என்பவரின் வாரிசுகளான கருணாகரன், ராமசாமி, விஜயபூமாதேதி, கோவிந்தராஜ், மீனாம்பிகை ஆகியோர் வாரிசுகள் என்றும், அதில் ராமசாமி என்பவர் இறந்து விட்டதாகவும், அவரது மனைவி பெயர் ராஜலெட்சுமி என்றும், ஏற்கனவே இறந்துவிட்ட 7ம் பிரதிவாதி பொட்டையம்மாளுக்கு

இளையக்காள்-1, சித்திரைவேல்-2, வெள்ளையன்-3, ஆறுமுகம்-4, கருப்பசாமி-5 ஆகியோர் வாரிசுகள் என்ற நிலையில் அவர்களை வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றும், மேற்படி விபரத்தை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை மூலம் ஏற்கனவே தெரிவித்தும் மனுதாரர்கள் தரப்பில் முறையாக திருத்த மனுதாக்கல் செய்யவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

வழக்கில் 1ம் பிரதிவாதி பேச்சி காலமாகி விட்டதால் அவரது வாரிசுகளான உத்தேச 8 முதல் 10 பிரதிவாதிகளை சேர்க்கக்கோரிய மனு நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கின் 6, 7 பிரதிவாதிகள் இறந்து விட்டதாகவும், அவர்களை வாரிசாக சேர்க்கக்கவில்லை என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்கக்கோரிய மனு இ.ம.எண்.02/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிபந்தனைகளின் அடிப்படையில் மனுவை அனுமதிக்குமாறு

மேற்குறிப்பு செய்யப்பட்டு அதனடிப்படையில் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு பிராதை சீர்திருத்தம் செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபித்ததுபோல் இறந்துபோன 6, 7 பிரதிவாதிகளின் வாரிசுகளை சேர்க்காமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்கப்பதற்கு மட்டுமே நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. எனவே 6, 7 பிரதிவாதிகளின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்த்து வழக்கினை மேல்நடத்த வாதிகள் தரப்பில் மனுதாக்கல் செய்யவும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளைப் பொறுத்து பிராதை சீர்திருத்தம் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 21.06.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.21 19:52:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.21 19:52:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.